விலை: சதம் 75 ★ ★

எம்மிடம்......
இறக்குமதி செய்யப்பட்ட

ரெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

H.ESMAILJEE&Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 8 துல்ஹஜ் 24 இதழ் 222
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-9-1981

★ பொலிஸாருக்கும் கொள்ளையருக்குமிடையே நடந்த

# துப்பாக்கிச் சண்டையில் ஒருவர் பலி!

(நமது வவனியா நிருபர்)

பயங்கர கொள்ளைக் கோஷ்டிக்கும், பொலிஸாருக்குமிடையே நேற்றுக் காலை நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் பிரபல கொள்ளைக்காரர் என்று பொலிஸாரினால் கருதப்பட்ட சந்திரசேகர என்பவர் ஸ்தலத்தில் மரணமானார்.

இச்சம்பவம் ஹொறவப் பொத்தானையில் நடைபெற்றுள்ளது.

வவனியாப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஹொறவப் பொத்தானையில் வைத்து ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டி, புத்தூரைச் சேர்ந்த கே. மதியாபரணத்தின் லொறியை மறித்து கொள்ளை அடித்ததைத் தொடர்ந்து அவர் வவனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து வவனியாப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ராஜபக்ஷ தலைமையில் ஒரு பொலிஸ் கோஷ்டி, சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்தது.

ஒரு கட்டத்தில் பொலிஸார் கொள்ளைக் கோஷ்டியை மடக்கிப்பிடிக்கச் சென்ற போது இரு பகுதியினருக்கும் இடையே நீண்ட நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரபல குற்றவாளியான சந்திரசேகர அல்லது சேகர என்பவர் ஸ்தலத்தில் மரணமானார். சிலர்

[6-ம் பக்கம் பார்க்க]

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானர்

(மட்டுவில்)

தங்கையின் திருமண விஷயமாக நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்திலிருந்து, விசுவமடு சென்றுகொண்டிருந்தவர் மீசாலை கமநலச்சேவை அலுவலகத்திற்கு அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றில் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார். பின்னிருந்தவர் ஆபத்தானநிலையில யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாநகரசபை தொழில் நுட்ப உத்தியோகத்தரும் வேலணையைச் சேர்ந்தவருமான 32 வயதுடைய பி. குணசிங்கம் என்பவரே ஸ்தலத்தில் மரணமானவராகும்.

## ரூ.10லட்சம் உதவி

[கொழும்பு]

அண்மையில் நிகழ்ந்த கலவரங்களினல் பாதிக்கப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் புனர்வாழ்வுக்கு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, பத்து லட்சம் ரூபாவை ஜனதிபதி நிதிக்கு இன்று வழங்கியது.

## கொள்ளை!

[துணுக்காய்]

துணுக்காய் எரிபொருள் விற்பனை நிலையத்திற்குரிய பணம் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. விற்பனைப் பணமான 27,939 ரூபாவை, சங்க முகாமையாளர் வி.குஞ்சுத்தம்பி தலைமைச் சங்கத்திற்குக் கொண்டுசென்ற போது முகத்தில் மிளகாய்த் தூள் தூவித் தாக்கிவிட்டு, மூவர் பணத்தைக் கொள்ளை அடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது மாங்குளம் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துவருகின்றனர். [மு]

## தூக்கிலிடப்பட்டனர்

டாக்கா, செப் 23

பங்களாதேஷில்நேற்று காலை 12 இராணுவ அதிகாரிகள் தூக்கிலிடப்பட்டார்கள்.

கடந்த மே மாதம் 30ம் திகதி இவர்கள் ஜனதிபதி சியாவுல் ரகுமானிற்கு எதிராகச் சதிசெய்து அவரைப் படுகொலை செய்ததாகவும் அரசுக்கெதிராக புரட்சிச் சதியில் ஈடுபட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டனர்.

"மன்றின் பாதுகாப்பிலிருந்து விடுவித்த பின்னரே

# அமைச்சரின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும்

## சுன்னுகம் பொலிஸ் வழக்கு தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

''பாதுகாப்பு அமைச்சர், மன்றின் பாதுகாப்பிலிருக்கும் ஒருவருக்கு எதிராகத் தடுப்புக் கட்டளை பிறப்பித்தால் அதைச் செயற்படுத்த முன்பு அவரை மன்றின் பாதுகாப்பிலிருந்து விடுவிப்பதற்குக் கட்டளை கோரவேண்டும். அதன் பின்புதான் பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் கட்டளையை நிறைவேற்ற வேண்டும்''

சுன்னுகம் பொலீஸார் இருவர் பொய்ச் சாட்சியம் சிருஷ்டித்தது தொடர்பான வழக்கில், சந்தேக நபர்களான பொலிஸார் கோர்ட்டில் ஆஜராகாதது பற்றிய விசாரணைத் தீர்ப்பில் யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்தேகநபர் வேலாயுதபிள்ளை சார்பில் சட்டத்தரணிகள் ஆர். விஸ்வநாதன், எஸ். லோகேஸ்வரன், ரி. சோமசுந்தரம் ஆகியோரும் சந்தேகநபர் இரகுநாதனின் தரப்பில் சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம், சட்டத்தரணி சூரியகுமாரின் உதவியுடன் ஆஜரானர்.

அரசு தரப்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பகுதிப் பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் திரு. ஹேமச்சந்திரா ஆஜரானர்.

தீர்ப்பில் கூறப்பட்டிருந்ததாவது;

''மன்றின் அபிப்பிராயப்படி பயங்கரவாதத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் சட்டவிரோதமான செயல்களில்ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தடுப்புக் கட்டளை பிறப்பிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உண்டு என்பதில் ஐயமில்லை. ஓரமைச்சரின் தடுப்புக்கட்டளை சம்பந்தமாக மேன்முறையீட்டு வழக்கு எசி 1942ம் பக்கம் 225ல் மாக்மில்லன் பிரபு ஒருவருக்கு எதிராகதடுப்புக்கட்டளை பிறப்பிப்பதற்கு நம்பக்கூடிய தகுந்த காரணம் இருக்கின்றதா என்பதை எவ்வாறு மன்று அறிய முடியும்? அது ஒரு அபிப்பிராயம்—கொள்கை நிகழ்வு அல்ல என்றுகூறியிருக்கின்றார். இதே போன்று பாக்கர் பிரபு சமோராவில் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் அவ்வாறு செயல்களைச் செய்வதற்குத் தேசிய பாதுகாப்புக்குத் தேவையானது என்பதை நிச்சயிக்க தேசிய தேவைக்குப் பொறுப்பாக உள்ளவர்களே தீர்ப்பு அளிக்கவேண்டியவர்கள்' என்று கூறியிருக்கிறார். அத்துடன் இத்தகைய விடயங்கள் மன்றில் சான்றாக விளங்குவது திருப்திகரமான காரியமல்ல என்றும் கூறியிருக்கின்றார்

''மன்றின் அபிப்பிராயப்படி அத்தகைய தடுப்புக்கட்டளை மன்றின் பாதுகாப்பில் இருக்கின்றவர்களுக்கு எதிராகச் செயல்படுத்தமுடியாது. ஒருவர் மன்றின் பாதுகாப்பில் இருக்கின்றபொழுது மன்று அவருடைய பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளது.

''சிறைச்சாலை அதிகாரி மன்றினல் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்களைத் தகுந்த பாதுகாப்பில் வைத்திருந்தது மன்றினல் குறிப்பிடப்பட்ட தேதியில் மன்றில் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும்

[6-ம் பக்கம் பார்க்க]

## வல்லைவெளிச் சம்பவம்: தலைமறைவானகைதி சரணடைந்தார்

[நமது புலோலி நிருபர்]

வல்லை உப்புவெளியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது தலைமறைவான கைதியான இராசதுரை தங்கராசா என்பவர் பருத்தித்துறை சிறைச்சாலை அதிகாரிகளின் முன்னிலையில் நேற்றுக்காலை சரணடைந்துள்ளார்.

இவர், பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற மரணவிசாரணையின் போதும் சாட்சியமளித்தார். பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ். மகேசன் மரண விசாரணை நடாத்தினர்.

சாட்சியமளித்த பின்னர் கைதியான தங்கராசாவை பருத்தித்துறை சிறைச்சாலை பொறுப்பதிகாரியிடம் பாரப்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டு அக்டோபர் 2ம் திகதி இந் நீதிமன்றத்தில் பாதுகாப்பாக ஆஜர்படுத்துமாறும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் அவர் உத்தரவிட்டார். [மா]

## கட்டுநாயகாவில் புதிய பரிசோதனை முறை

(கொழும்பு)

வெளிநாடடிலிருந்து கட்டுநாயகா விமான நிலையத்தை வந்தடையும் பிரயாணிகளின் பரிசோதனையை துரிதப்படுத்துவதற்கு அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய முறை கையாளப்படவுள்ளது.

வெளிநாட்டுப் பிரயாணிகள் 'பச்சை வழி முலமும்' வெளிநாட்டிலிருந்து திரும்பும் இலங்கையர்கள் 'சிவப்பு வழி மூலமும்' பிரவேசிக்கவேண்டும். பல சர்வதேச விமானநிலையங்களில் இதே முறை கையளாப்படுகின்றது. [கு-வெ]

# தமிழில்வரும்கடிதங்களுக்கு தமிழிலேயேபதில்

## அரச அதிபர் நடவடிக்கை

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கும் சகல காரியாலயங்களிலும், பொதுமக்களிடமிருந்து வரும் தமிழ்க்கடிதங்களுக்கு தமிழில் பதில் அனுப்ப வேண்டும் என, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா பணித்துள்ளார்.

கடந்த 15ம் திகதி நடந்த மாவட்ட அபிவிருத்திசபை கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தமிழில் எழுதப் படும் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில் கிடைப்பதாக தெரிவித்த புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எஸ். நடராசா அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவுடன் இவ் விடயமாக தொடர்பு கொண்டதைத்தொடர்ந்து அரசாங்க அதிபர் இந்த பணிப்புரையை அனுப்பியுள்ளார். [மா]

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

# 'மாணவர் தொழில்கல்வியில் நாட்டம் செலுத்தவேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"இன்று தொழில் வாய்ப்பைப்பெற முடியாமல் இளைஞர்கள் கவதியுறுவதைக்காண்கின்றோம். உலோக ஓட்டு வேலை, மேசன்திரிவேலை முதலான தொழிற்பயிற்சிக் கல்வி பெற்றவர்கள் பிறநாடுகளிலும் தொழில் வாய்ப்பும் கூடிய சம்பளமும் பெறுவதை அறியக்கூடியதாய் உள்ளது. நூறு வருடங்களுக்கு முன்னமைந்த கல்விமுறைதான் இன்றும் இருக்குமானால் அதனால் பயனில்லை. காலமாற்றம் நாட்டின் தேவை முதலானவற்றுக்கு அமைவாகவே கல்வியும் அமைதல்வேண்டும். ஆதலால் மாணவர்கள் பட்டப்படிப்பையே இறந்ததென மதியாமல் இன்று சீவாதாரமாய் விளங்கும் தொழிற்பயிற்சிக் கல்வியில் நாட்டஞ்செலுத்த வேண்டும்"

கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரியின் வளர்ச்சிக்கு அரசினர் உதவியையே எதிர் பார்த்திராமல் பெற்றோர் பழைய மாணவர் முதலானோர் ஒவ்வொருவரும் உதவவேண்டும் என்றும் அங்ஙனம் நன்மை செய்யாவிட்டாலும் கல்லூரி நிருவாகத்திற் புகுந்து தீமையாவது செய்யாமல் இருப்பதும் ஒருவகையில் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உதவுவதாகவே இருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. சு. கனகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. தங்கராசா, யாழ். மாவட்ட சபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரை, கல்லூரி ஆசிரியர் திரு. க. சம்பமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (க)

# கம்பன் விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் இன்று தொடக்கம் 5 நாட்களுக்கு (28ம் திகதி வரை) கம்பன் விழாவை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கொண்டாடவிருக்கின்றனர்.

இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்ற தென்னிந்தியாவில் திருச்சி தேசியக் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றும் திரு. இரா. இராதாகிருஷ்ணன் இங்கு வந்துள்ளார்.

முதலாம் நாள் விழா இன்று மாலை 5 மணிக்கு பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் ஆரம்பமாகிறது.

பெண்மைக்குரிய ஆற்றலின் விஞ்சியவள் தாரையா? மண்டோதரியா? என்ற தலைப்பில் ஆரம்பமாகும் பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் நடுவராகக் கடமையாற்றுவார்.

"தாரையே" என்பது பற்றி திருவாளர்கள் க. சிவராமலிங்கம், க. சொக்கலிங்கம், நா. சுப்பிரமணிய ஐயர், திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகி

(5ம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா

காலம்: 24-9-81 வியாழக்கிழமை பி. ப. 4-30 மணி
இடம்: கல்லூரி மண்டபம்
பிரதம விருந்தினர்: பேராசிரியர் S. மகேஸ்வரன் B Sc (Cey; M. Sc., Ph. D., (Sheff) F I. Chem. C.
(யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)
பரிசு வழங்குபவர்: கலாநிதி (திருமதி) R. மகேஸ்வரன் B. Sc. (Cey ), Ph. D. (Sheff) A. I. Chem. C.
(யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)

பெற்றோர், பழைய மாணவர், அனுதாபிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

1043

## ஸ்ரீ லங்கா அரச வர்த்தக (டிராக்டர்) கூட்டுத்தாபனம்

கொழும்பு 12, ஓல்கொட் மாவத்தை 343-ம் இலக்கத்திலுள்ள எமது சொந்தக் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்துள்ளோம். அக்காலத்தில் எமது வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டிருப்பின் அதற்காக வருந்துவதுடன் அவற்றைப் பொருட்படுத்தாது எம்முடன் ஒத்துழைப்பார்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

ஒல் கொட் மாவத்தை ஆபிஸில் 21 செப்டெம்பர் 1981 முதல் விற்பனை நடைபெறுகிறது.

ஒல்கொட் மாவத்தை தொலைபேசி இல: 21347

**பொது முகாமையாளர்**

244, ஆர்னோல்ட் இரத்நாயக்க மாவத்தை,
கொழும்பு-10.

தொலைபேசி: 91710/91712/91398.

## கி. அ. சங்கம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரைட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கிறேக பூர்வமாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்திற்கும் பண்டத்தரிப்பு பிரைட்டன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திசங்கம் வெற்றியீட்டியது. [மா]

## விளம்பரம் வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 2000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 26-9-81 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக சங்க காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா 500/- ஆகும்.

பொதுமுகாமையாளர்,
களவெட்டி — மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

1044

சி. இராசேந்திரன் ஜே. பி.
சட்டத்தரணி.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரேசபிள்ளை விநாயகமூர்த்தி அவர்களின் மரணச்சொத்துக்கு மரணசாதனத்துடன் நிர்வாக அதிகாரப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணத் தத்துவ வழக்கு இல. 3612/T

விநாயகமூர்த்தி மகள் யசோதி, ஆனைக் கோட்டை.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்துக்கு மரணசாதனத்துடன் நிர்வாக அதிகாரப்பத்திரத்தைப் பெறுவதற்காக தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.

1981-ம் ஆண்டு ஆவணிமாதம் 14-ந் திகதி.

வரைந்தவர்:
சி. இராசேந்திரன்,
மனுதாரரின் சட்டத்தரணி.

1034

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 151, கஸ்தூரியார் வீதி, 'சத்தியா & கோ' அவர்களிடம் 1-11-79 தொடக்கம் 20-8-80 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 24-10-1981 சனிக்கிழமை காலை பத்துமணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1037

முதல் தோற்றத்திலேயே முற்றுகும் கட்டளை பற்றிய

### அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

புலோலி கிழக்கு இலையா சுபாரத்தினம் வைப்பெனன் பொன்னம்மாவின் மரணசாதனச் சொத்துக்கள் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்

புலோலி தெற்கு யாப்பா கனகசபைனார் வயித்திலிங்கம்

மனுதாரர்

மரணசாதன நிறைவேற்றல் இல: T/1107

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ் சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
க. செல்வராசா,
பதிவாளர்,

வரைவு
ஒப்பம்
வ. செல்லையா
மனுதாரரின் சட்டத்தரணி.

1038

பின்னுறுதிக்கட்டளை பற்றிய

### அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மல்லாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவநேசன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் வழக்கு இல. ரி/94

சின்னத்தம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளை, காளிகோயிலடி, மல்லாகம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளஆள்எவரேனும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ந் திகதி.

நீதிமன்ற கட்டளைப்படி
சு வ. கணேசன்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
செ. புண்ணியமூர்த்தி,
மனுதாரரின் சட்டத்தரணி.

(1042)

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியில் வீடு, வளவு விற்பனைக்கு உண்டு 27-9-81 மாலை 2 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் தான் விலை தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: P. சிவராசா, 417, K. K. S. வீதி, இலவிங்கப்புளியடி, யாழ்ப்பாணம் 1045

இராச வீதியில் வெலிங்டன் பாமுர்கு எதிரில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. செ. சின்னராசா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1016

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 4-10-81 அணுகவும் சேரமாம் நஷனல் அக்கடமி, மொசம் சாக் கட்டிடம் ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (1020)

### தவறிவிட்டது

முக்குச்சண்ணுடி கூட்டுடன் சென்ற 8-9-81இல் கோண்டாவில் பேருந்து நிலைய சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். வை. பொன்னுச்சாமி, கே. கே. எஸ். வீதி, கோண்டாவில், 1039

### தேவை

அரிசி, மிளகாய், மா அரைக்கும் அல்லர்கள் 10/H/P மோட்டர்கள் தேவை விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்: லங்கா சேவிஸ் ஸ்டேசன், மருதனுமடம், சுன்னாகம். 1025

### பயிற்சி

வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வயறிங் வகுப்புக்கள் [செய்முறையுடன்] ஆரம்பம்: C. E T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம். (சாந்தி சினிமாவிற்கு முன்) 22, ராமநாதன் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 1026

## மரக்கடத்தல் தடுக்கப்பட்டது

(வவுனியா)

சன்னாசி பரந்தன், காடிக்குளம் ஆகிய கிராமங்களின் காட்டுப்பகுதியில் முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான கள்ள மரங்களை வடபிராந்திய வனகுதித் திடீர் பரிசோதனைக் குழுவினர் வளைத்துப் பிடித்தனர்.

நடுக்காட்டின் மத்தியில் இரண்டு இடங்களில் 30 முதிரை மரத்துண்டுகளை மேற்படி குழுவினர் கைப்பற்றினர். மரக்கடத்தல்காரர்கள் கடத்திச் செல்வதற்கு ஆயத்தமாக இருந்த நிலையிலேயே இக்களவு தடுக்கப்பட்டது.

அண்மையில் இப்பகுதிகளில் மேற்படி மரக் களவுகள் நடைபெறுவதாக வனபகுதி திடீர் பரிசோதனைக் குழுவின் பொறுப்பதிகாரி திரு. ரி. மாணிக்கவாசகமும் அவரது உதவியாளர் திரு. வி. வீரந்திரராசாவும் தெரிவித்தார்கள்.

## தலைவர் ராஜினுமா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் திரு. செ. திலைநாதன் தலைவர் பதவியிலிருந்து இராஜினுமாச் செய்துள்ளார்.

### மணிவாக்கு

துயரத்தை ஏற்றுக்கொள்ளத் தெரிந்துகொள்ளும் முறைகள் தெரிந்து கொள்பவர்க்குத் துயரம் இல்லை.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## 'கண் உடையர் என்பவர்'

சாதாரண அமெரிக்கர் ஒருவர் நூல் வாசிப்பதையோ சிந்திப்பதையோ விரும்பமாட்டார்; அவருக்குப் பிடித்தமானது நெடுஞ்சாலையில் சனநெரிசலுக்கே காரைச் செலுத்துவதே; ஒரு பிரெஞ்சுக்காரர் சிறந்த நாடகம் பார்ப்பதிலும் பார்க்க சுவையான வைன் அருந்துவதிலே இன்பம் காண்பர்; ஆங்கிலேயர் ஒருவருக்கு உதைபந்தாட்டப் போட்டியிலே மனஞ்செல்லும்; ஷேக்ஸ்பியர் படிப்பது இரண்டாம் இடத்தையே பெறும். இலங்கை மக்களை எடுத்தால் கணிதமோ கவிதையோ இன்று சினிமாவைப்போல் கவர்ச்சிகரமாக இருக்காது.

இதற்கென்ன காரணம்? கல்வியில் ஏதோ குறைபாடு இருக்க வேண்டும்.

சாதாரண மத்திம விவேக மாணவர்களே பெரும்பான்மையோர்; இவர்களின் நலன்களைக் கவனிப்பதே பாடசாலைகளின் முதன்மையான கடமை என்றபோக்கு ஒரு காரணமாகவிருக்கலாம்.

சமூக வாழ்க்கையில் ஈடுபடுவோர் பெரும்பாலும் சாதாரண ஆற்றல் பெற்றவர்கள்; எனவே இவர்களின் கூட்டு வாழ்க்கைக்கு உவந்த கல்வி முறை அதிக கவனத்தை ஈர்க்கின்றது. இது உண்மைதான்; ஆனால் அதிமனிதர்களாக உருப்படும் அசாதாரண ஆற்றல்பெற்ற மாணவர்களையும் கவனிப்பது பாடசாலைகளின் பொறுப்பென்பதை மறக்க வேண்டியதில்லை.

நாளை நிகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் உலகப்பிரசித்தி பெற்ற இரு யாழ்ப்பாண அதிமனிதருக்கு டீ. லிற். டீ எஸ். சி. என்ற கௌரவப் பட்டங்கள் வழங்கப்படுவதை அறிவியல் உலகம் அகமகிழ்ச்சியுடன் பாராட்டும்.

தமிழ்ப் பேரறிஞர் வண. தனிநாயக அடிகளுக்கு தேகாந்த நிலையில் டீ லிற். பட்டம் வழங்கப்படுவதை தமிழ் கூறும் நல்லுலகம் சோகங்கலந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கும். பாரதியாரின் பணிப்பை சிரமேற்கொண்டு உலகின் எட்டுத் திக்கிலும் தமிழின் இனிமையை எடுத்துச் சென்ற சான்றோரைத் தம் சொந்த நாடு, பிறந்த மாநிலத்தின் பல்கலைக்கழகம் கௌரவிப்பதால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னையே கௌரவித்துக்கொள்கின்றது.

உலகப் புகழ்பெற்ற கண் வைத்திய டாக்டர் இ பரராஜசேகரம் அவர்களுக்கு டீ. எஸ் சி பட்டம் வழங்கப்படுகிறது. உலகின் பல பாகங்களிலும், குறிப்பாக ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் உயர்தர கருத்தரங்குகள் நிகழ்த்தியும், தம் ஆற்றலையும் ஆராய்ச்சியையும், கண் பார்வை இழந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் புனர்வாழ்வுக்கு அர்ப்பணஞ் செய்தவருபவரை யாழ். பல்கலைக்கழகம் கட்டி அணைத்து தன்னுடைய குடும்பத்தின் பெருமகனை உபசரிப்பது பாராட்டுக்குரியதாகும்.

இப்பெரியார் இருவரையும் நாம் உதாரணமாக எடுத்துக்கொண்ட கல்விக் கருத்தை மறந்து வேறு விபரங்களில் மனத்தைவிடுவதாக வாசகர்கள் எண்ணிவிடக்கூடாது.

விடயம் இதுதான்! குறித்த இருபெரும் அறிவியல் மேதைகள் இரண்டாயிரம் வருடத்துக்குமுன்னர் முனிவரும் 17ம் நூற்றாண்டில் மூதாட்டியும் மொழிந்த உண்மைக்குப் பொருத்தமாக அமைந்தவர்கள்.

கல்வியை இரண்டாகப் பிரித்தனர். ஒன்று கணிதம்; மற்றொன்று இலக்கியம். இவை இரண்டும் மனிதனுக்கு இரண்டு கண்களைப் போல ஆவன.

இன்று பல்கலைக்கழகங்களின் பலதுறைகளும் பீடங்களும் கொண்டிருக்கும் பல்வகைப் படிப்புகள் இவ்விரண்டினில் அழகாக அடங்கும்.

மருத்துவத் துறையினில் கண்பகுதியில் உலக சாதனைகள் இயற்றிய டாக்டர் பரராஜசேகரம் முனிவர் கூறிய கணிதப்பகுதியில் ஈடுபட்டவர். கணிதம் என்பது விஞ்ஞான அடிப்படையில், காட்சித்திறன் என்ற ஆற்றலைப் பயன்படுத்தி காரண காரிய ரீதியில் உண்மைகளைக் கண்டறிதலைக் குறிக்கின்றது.

மக்களின் அடிப்படை தேவைகளுக்கும் உயிர் வாழ்தலின் இரகசியத்துக்கும் அத்தியாவசியமாக இருப்பது விஞ்ஞான சிந்தனைத்திறன். அறிவியல் மாமேதை பேட்டிராண்ட் ரஸ்ஸெல் இத்திறனை விருத்தி செய்யவே கணிதத்தையும் தத்துவத்தையும் தமது பதினொராவது வயதிலே படிக்கத் தொடங்கினார்.

எழுத்து என்பது இலக்கியமெல்லாம் கண் இழந்தவர்களுக்கு கண்ணை அப்பவல்ல 'கண்ணப்ப நாயனார்' பரராஜசேகரத்திற்கு இந்த வரம், இலக்கிய [இலட்சிய] கண் பெற்ற அவருடைய தந்தையார் பெரியார் இராமச்சந்திரனிடம் கிடைத்திருக்கலாமென நினைக்கவும் இடமுண்டு.

உயர்ந்த இலக்கியம் அகக்கண்ணைத் திறக்கவல்லது. கண்கள் இரண்டையும் இழந்த நிலையில் ஆங்கிலப் புலவர் மில்டன் எழுதிய காவியம் 'இழந்த சுவர்க்கம்' [Paradise Lost] உலக இலக்கியத்தில் இடம் பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, வளர்ந்து யாழ்ப்பாணத்தில் ஆரம்பக்கல்வி, சிரேட்டகல்வி பெற்று பல்கலைக்கழகக் கல்வியில் பெருமுயற்சிபெற்று மனித சமுதாயத்துக்கே இவ்விருவரும் மாபெரும் சேவையாற்றும் ஆற்றலும் பண்பும் பெற்றது யாழ்ப்பாணத்திலே பல்கலைக் கழகம் ஒன்றில்லாத காலத்தில் நிகழ்ந்த வரலாறு.

இன்று இவ்வித அறிவியல் மாமேதைகளும் சான்றோர்களும் உருவெடுப்பதில் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் உள்ள பொறுப்பை இத்தவைபவம் நினைவூட்டுகின்றது.

### 1980 கள்

# உலகெங்கும் மனித உரிமைகளுக்கு சோதனை மிக்க காலம்

## சர்வதேசமன்னிப்புச்சபையின்கணிப்பு

1980கள் மனித உரிமைகளுக்குக் கடும் சோதனை மிக்க காலமாக இருக்குமெனத் தோன்றுகின்றது.

மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை பல நாடுகளிலே தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது. பல்வேறுபட்ட சமூக அமைப்புக்களையும் கோட்பாடுகளையும் கொண்டிருக்கும் வெவ்வேறு நாடுகளிலே சித்திரவதையும், கொலையும், கடத்திச் செல்லுதலும், சிறையிடுதலும் —இவை பல தடவைகளிலே அரசாங்கங்களின் உச்சமட்டங்களினால் அங்கீகரிக்கப்படுகின்றன-திட்டமிட்டுநடைபெற்று வருகின்றன.

கொல்லப்படுபவர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. கௌதமாலாவில் ஆயிரக்கணக்கானோர் அரசதுறையினரால் கொல்லப்பட்டுள்ளனர் - அரசாங்க பணிப்பின் பேரில், ஆர்ஜென்டீனாவிலும், பிலிப்பைன்சிலும் பாதுகாப்புப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டவர்கள் பின்புதிரும்பி வரவேயில்லை.

வேறு சில நாடுகளிலே-எடுத்துக்காட்டாக, ஈரான், ஈராக்-விசேட நீதிமன்றங்கள் அரசியல் காரணங்களுக்காக மரண தண்டனை விதித்துள்ளன. இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையில்லை. அவர்கள் ஒன்றில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் அல்லது தூக்கிலிடப்பட்டார்கள்.

சிறையிலிருக்கும்போது அல்லது இராணுவ, பொலிஸ்பாதுகாப்பிலிருக்கும்போது பலர் இறந்துள்ளனர்-பெரும்பாலும் சித்திரவதையின் நேரடி விளைவாக கடந்த ஆண்டிலே இத்தகைய சம்பவங்கள் பொலிவியா, ஸ்பெயின், துருக்கி, உருகுவே, சைரே போன்ற நாடுகளிலும் வேறு சில நாடுகளிலும் நடைபெற்றன.

சோவியத் ஒன்றியம்தொடக்கம் கொரியா குடியரசு வரை, சீனா தொடக்கம் ஹைபிற்றி வரை அரசாங்கக் கொள்கைகள் மீது கண்டனக்கணை தொடுப்பவர்கள் கடும் தண்டனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளனர். முகாம்களிலும் சிறைகளிலும் கடுந்தண்டனைகளை அவர்கள் அனுபவிக்க நேரிடலாம்.

பல பிரதேசங்களிலே, இன, சமய, அரசியல் காரணங்களுக்காக சிலர் காலவரையறையின்றி சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தண்டிக்கப்பட்ட ஒருவர் கூறியது போல, "சிறைச்சாலைகள் உயிரோடிருப்பவர்களின் கல்லறைகளாக மாறிவிட்டன; மனச்சாட்சிக்காக சிறைசென்ற சிலர் எத்தனையோ தசாப்தங்களாகமறியலில்வாடுகின்றனர்

மாறுபட்ட கருத்தை உடையவர்கள் அல்லது அவ்வாறு சந்தேகிக்கப்படுபவர்கள் விசாரணையின்றி குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாத நிலையில் அநேகமாக சிறையில் வைக்கப்படுகின்றனர். இவ்வாறு சிலர் மலேசியாவிலும் பரகுவேயிலும் வருடக்கணக்காகச் சிறையில் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளனர். தென் ஆபிரிக்காவில் சிலர் 'தடை' செய்யப்பட்டுள்ளனர். இவர்களை 'மௌனிகளாக' ஆக்கும் உத்தி இது.

வேறு சில உதாரணங்களையும் தரலாம். ஐக்கிய நாடுகள் சபையிலே உறுப்பினர்களாக உள்ள 154 அரசாங்கங்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் மனச்சாட்சிக் கைதிகளை சிறையில் இட்டுள்ளனர். இவர்கள் பலாத்காரத்தைப் பயன்படுத்தவுமில்லை, ஆதரிக்கவுமில்லை. அவர்களுடைய நம்பிக்கைகளுக்காகவோ பிறப்புக் காரணமாகவோ தான் இவ்வாறு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

50க்கு மேற்பட்ட நாடுகளில் விசாரணை எதுவுமின்றி, குற்றச்சாட்டுக்கள் எதுவும்சுமத்தப்படாமல் நிர்வாக ஆணை மூலம் பிரஜைகளைத் தடுத்து வைக்கலாம்.

## வெளியான்

அரசாங்கங்கள் மட்டும்தான் மனிதஉரிமைகளை மீறுகின்றன எனச் சொல்வதற்கில்லை அரசாங்கங்களைச் சாராத குழுக்களும் அரசியல் எதிரிகளைக் கொலை செய்கின்றனர் அல்லது சித்திரவதை செய்கின்றனர். பணயக் கைதிகளைச்சிறை வைக்கின்றனர் ... அரசாங்க ஒடுக்குமுறைகள் எவ்வளவு வெறுக்கத்தக்கவையோ அதே போன்று இத்தகைய செயல்களும் நிராகரிக்கப்பட வேண்டியவை.

இந்த தசாப்தத்தில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதென்றால் அனைத்துலக அடிப்படையில் அவசரமுயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1975ல் இராணுவப்பொலிசாரால் கைது செய்யப்பட்டு அவர்களது பாதுகாப்பில் இருக்கும் போது இறந்துவிட்ட பிரசீலிய பத்திரிகையாளன் விளடிமீர் கேட்சொக்கின் உணர்ச்சிமிக்க கூற்று எம்மையெல்லாம் தட்டி எழுப்ப வேண்டும். மற்றவர்களுக்கு கொடூரங்கள் இழைக்கப்படும் போது தர்மாவேசம்

[6ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

## பிழையின்றி பிரசுரிக்கவும்

பழைய நூற்பதிப்புக்களில் நாவலர் அவர்களுடைய பதிப்புக்களே சிறந்தவை, மிகவும் திருத்தமானவை, எவ்வித பிழைகளுமற்றவை என்று எல்லோராலும் போற்றப்படுபவை. ஆனால் சமீபத்தில் நாவலர் சபையால் அச்சிட்டு வெளியிடப்பட்ட கந்தபுராணவசனம் வேதனைக்குரிய விதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. எழுத்துப் பிழைகள் அதிகம். தொடக்கத்தில் இருந்து முடிவு வரை பிழைகள் மலிந்து தொண்டேபோகின்றன. அத்துடன் நாவலர் நூல்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டியவை. அதற்கேற்றவகையில் நல்லரகக்காகிதத்தில் அச்சிடப்படவில்லை. புதினத்தாள் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

நாவலர் பிரசுரங்களைப் பதிப்பித்து வெளியிடுவதை ஊக்குவிக்கும்முகமாகவே கூடிய தொகையென்றும் கருதாது பணம் கொடுத்து வாங்க முன்வந்துள்ளோம். ஆகவே இனி மேல்வரும் பிரசுரங்களையாவது நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்

மு. பொன்னம்பலம்

கெருடாவில்,
தொண்டமானாறு.

## சிறைக்காவலில் உள்ளவர்களின் பாதுகாப்பு

இம்மாதம் 18-ந் திகதி காலை சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்தமூவர் வல்லையில் கொலை செய்யப்பட்டமையும் இன்னொருவர் பலத்த காயங்கள் அடைந்தமையும் முக்கியமான ஒரு கேள்வியை எழுப்புகின்றன; சிறைக்காவலில் உள்ளவர்களின் பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு?

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரிலேயே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர் விசாரணைகள் தங்குதடையின்றி நடைபெறுவதற்கும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவாகி விடுவதையோ அவர்களுக்கு எதிரிகள் தீங்கு எதையும் செய்வதையோ தடுக்கும்பொருட்டே இத்தகைய ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே சிறைக்காவலில் உள்ளவர்களின் பாதுகாப்பு, சிறைச்சாலை அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதால், தமது பொறுப்பிலே உள்ளவர்களுக்கு சிறைச்சாலைகளிலும் அவர்கள் நீதிமன்றம் அல்லது மருத்துவமனை ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்படும் போதும் தீங்கு எதும் நேராவண்ணம் முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது சிறைச்சாலை அதிகாரிகளின் பாரிய கடமையே.

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் தமது காவலில் விடப்பட்டிருந்த ஆறு பேரை

[6-ம் பக்கம் பார்க்க]



கல்வித்திணைக்களம் யாழ். மாவட்ட ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்திய இசை, நடன, நாடகப் போட்டிகளில் பங்கு கொண்டு இசை நாடகத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற நடேஸ்வராக்கல்லூரியின் தயாரிப்பான "குசேலர்" நாடகத்தில் ஒரு கட்டம். பங்கு கொண்ட ஐந்து நிகழ்ச்சிகளில் நான்கில் முதலாமிடத்தையும் தனி நடனத்தில் மூன்றாமிடத்தையும் இக் கல்லூரி பெற்றது. மேற்படி நாடக நெறியாள்கை செய்தவர் ஏ. ரீ. பொன்னுத்துரை

## வல்லை வெளி மூவர் மரண விசாரணை:

# "கவனமாகப் போகுமாறு பாலசுந்தரம் அச்சுவேலியில் என்னிடம் கூறினர்

### கைதி மகேந்திரன் சாட்சியம்

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

''கம்பர்மலை அறுவர் கொலை சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாம் அறுவரும் சம்பவதினம் நீதிமன்றத்திற்கு பஸ்ஸில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கொண்டுவரப்பட்டபோது அச்சுவேலி பஸ் நிலையத்தில் வைத்து பாலசுந்தரம் என்பவர் 'சென்ற தவணை நீங்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது உங்களை வல்லைவெளியில் வைத்துச் சுடுவதற்காக நெடுங்கேணியில் இருந்து அழகேஸ்வரன் ஆட்களைக் கொண்டுவந்ததாகத் தான் அறிந்ததாகவும் எனவே இம்முறையும் கவனமாகப் போகுமாறும்' எனக்குச் சொன்னார். சம்பவம் நடைபெற்ற இடத்தில் பஸ் நின்றதும் பற்றைக்குள்ளிருந்து கும்பலாக ஆட்கள் துவக்குகள், வாள்களுடன் ஓடிவந்தார்கள்.''

இவ்வாறு கடந்த 18ம் திகதி காலை உப்புவல்லை வெளியில் முகமூடிக் கோஷ்டியினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கம்பர் மலை அறுவர் கொலை வழக்கு விளக்கமறியல் கைதிகள் மூவரின் மரணவிசாரணையின்போது சம்பவதினம் தப்பியோடிய விளக்கமறியல் கைதியான மகேந்திரன் கூறினர். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்ற இம்மரணவிசாரணையின்போது தொடர்ந்து சாட்சியமளித்த விளக்கமறியல் கைதி மகேந்திரன் கூறியதாவது:

நான் கம்பர்மலையில் ஆறு நபர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேக நபராக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளேன். அந்த வழக்கில் என்னைவிட இன்னும் ஐந்து நபர்கள் சந்தேக நபர்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இராசதுரை அப்புத்துரை, இராசதுரை தங்கராசா, இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராசா, சின்னையா தில்லை நடராசா ஆகியோரே மற்றச் சந்தேக நபர்களாவர். இந்த வழக்கு கடந்த 18ம்திகதி இந்த மன்றில் நடக்கவிருந்ததுஎனக்குத் தெரியும்.

[5ம் பக்கம் பார்க்க]

## செல்வச்சந்நிதியில்

# தாலிக்கொடியை அறுக்க முயன்றாராம்

### சந்தேகநபர் கைது

[புலோலி]

ஆலய வழிபாட்டை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை கொள்ளையடிக்க முயன்றதாக கருதப்படும் ஒருவர் வகையாகச் சிக்கிக்கொண்டார்.

கலாஓ பொலிஸ் பகுதியைச் சேர்ந்த தெல்தேரட்டவில் வசிக்கும் சித்திக் ஹமீட் என்பவரே தாலிக்கொடியை அறுக்க முயன்றதாகக் கூறப்படுகின்றது.

செல்வச்சந்நிதிக்குச் சென்ற செல்லையா வசந்தா என்ற பெண் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு தமது சகோதரிகளுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வீதியால் வந்த நபரொருவர் அவர் அணிந்திருந்த தாலிக்கொடியை அறுப்பதற்கு கழுத்தில் கைபோடவே பெண் கூச்சலிட்டாராம்.

இதனைத்தொடர்ந்து அங்கு திரண்ட மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்ட சந்தேக நபர் பின்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறைப் பொலிசார் சந்தேக நபரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதவான் சந்தேக நபரை இம்மாதம் 24ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.


V. R. V.

# போக்குவரத்துச் சேவை

## கொழும்பு-யாழ்ப்பாணம்
## யாழ்ப்பாணம்-கொழும்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு
**செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலும்**
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு
**திங்கள், புதன் ஆகிய நாட்களிலும்**
பஸ் சேவை நடாத்தப்படும்.

## ஒருவழிப் பயணக் கட்டணம்
## ரூபா 40/- மட்டுமே

## கொழும்பில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

[1]
கிறீன்லண்ட் ஹோட்டல்
பம்பலப்பிட்டி.
தொலைபேசி இலக்கம்:
85592, 81986

[2]
சுந்தையா
குறோசரி ஸ்ரோர்ஸ்,
47, நொரிஸ் றோட்,
கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம்:
27748

[3]
V. R. வடிவேற்கரசன்
271, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம்: 34800, 32540

## யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

[1]
V. R. V. ட்ரான்ஸ்போட்
சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. 8162

[2]
றிக்கோ சுவீட் அன்
கிறீம் ஹவுஸ்,
தொலைபேசி இல.
464, 7889

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பஸ் பம்பலப்பிட்டி கிறீன்லண்ட் ஹோட்டலிலிருந்து இரவு 7-00 மணிக்குப் புறப்பட்டு நேரே செட்டியார் தெரு, கோவிலடிக்கு வந்து, அங்கிருந்து இரவு 7-30 மணிக்குப் புறப்படும்.

**யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி வெள்ளவத்தை வரை செல்லலாம்.**


## மீனவர் பிரச்னை: விசாரணை முடிவு

[மன்னார்]

தலைமன்னார் உள்ளூர்-வெளியூர் மீனவர்கள் பிரச்னை தொடர்பாக விசாரணை முடிவுற்றது. இதன் தீர்ப்பை ஆணையாளர் திரு. முத்தநாயக்கா கடல் தொழில் அமைச்சிடம் சமர்ப்பிப்பார்.

தலைமன்னார் உள்ளூர்-வெளியூர் மீனவர்கள் தொடர்பான விசாரணையை கடல் தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆணையாளர் திரு. முத்தநாயக்கா மேற்கொண்டு வந்தார்.

## சிறைக்காவலில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுப்போக்குவரத்து வாகனமொன்றில் அதுவும் அக்கொலை நடைபெற்றதாகக் கூறப்படும் பகுதியினூடாக, அனுப்பிவைத்தபோது சிறைச்சாலை அதிகாரிகள் உச்ச முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனரா?

சிறைச்சாலை திணைக்களத்திற்கு இது ஒரு நல்ல பாடமாக அமையட்டும். இனிமேலாவது இத்தகைய உயிர் இழப்புக்கள் நிகழாவண்ணம் அவர்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கே. தங்கராசா
ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிபர்

கொக்குவில்

## உலகெங்கும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளாது நாம் இருப்போமானால் எம்மை மனிதர் என்று கூறிக்கொள்வதற்கு அருகதையற்றவர்களாகின்றோம்.

(ஆதாரம்:
சர்வதேச மன்னிப்புச் சபையின் செய்தித்தாள்)

# இப்படியும் நடக்கிறது

'இண்டியா ருடே' எனும் இந்திய ஆங்கில சஞ்சிகையின் சிரேஷ்ட ஆசிரியர் திரு. வெங்கட் நாராயண், அண்மையில் இலங்கைக்கு விஜயம்செய்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை பேட்டி கண்டிருந்தார். இப்பேட்டி செப்டம்பர் மாத இதழில் வெளியாகியிருந்தது. பேட்டியை 'டெயிலிநியூஸ்' பத்திரிகை [தனது மூன்றாவது பக்கத்தில்] மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தது.

பேட்டியில் திரு. வெங்கட் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, ''யாழ் மாவட்டத்தில் இருபதுக்கும் அதிகமான பொலிஸ்அதிகாரிகள் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாகவே குழப்பங்கள் தலைதூக்கின. இவ்விதம் கொலை செய்யப்பட்ட பொலிஸாரில் அதிகமானவர்கள் சிங்களவர்கள், சிலர் தமிழர்கள் என்று தெரிவித்துள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க; கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான 'சண்டே ஒப்ஸேவர்' இதழின் ஐந்தாவது [முழுப்பக்கத்திலும்] ''தமிழர்கள் அன்றும் (1970-1977) இன்றும் (1977-1981)'' எனும் தலைப்பில் வெளியான பெரியதொரு செய்தியில் [செய்தியா அனுபந்தமா தெரியவில்லை. எழுதியவர் அல்லது தகவல் அளித்தவர் பற்றிய விபரமும் இல்லை] 1975 முதல் வடபகுதியில் 19 பொலிஸ் அதிகாரிகள் கொலைப்பட்டுள்ளனர். இவர்களில் தமிழர் பன்னிரண்டு, சிங்களவர் 06, முஸ்லிம் ஒன்று என்று விபரம் வெளியாகியுள்ளது!

ஊடுருவி

## அமைச்சரின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''பாதுகாப்பு அமைச்சர் மன்றின் பாதுகாப்பிலிருக்கும் ஒருவருக்கு எதிராக தடுப்புக் கட்டளை பிறப்பித்தால் அதைச் செயல்படுத்த முன்பு அவரை மன்றின் பாதுகாப்பிலிருந்து விடுவிப்பதற்கு கட்டளை கோரவேண்டும். அதன் பின்புதான் பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் கட்டளையை நிறைவேற்றலாம்.

''இது சம்பந்தமாகப் புதிய சட்ட அறிக்கை 73, பக்கம் 179ல் மகாராணி எதிர் ஞானசீலா வழக்கில் உயர்நீதிமன்று ''ஆரும் எதிரி நீதவானின் விளக்கமறியல் கட்டளையில் இருந்தபோதும் அக்கட்டளை அவருக்கு எந்த விதமான மாற்றமும் அளிக்கவில்லை. அவ்வாறு அவர் விளக்கமறியல் கட்டளையில் இருக்கின்றபொழுது அவர் புதிய மகசீன் சிறைச்சாலையில் இருந்து கல்ஸ்டோப் தடுப்பு முகாமுக்கு நீதவானின் உத்தரவில்லாமல் எடுத்துச்செல்லப்பட்டார்'' என்று அவதானித்துள்ளது.

ஆனால் இந்த விடயம் அந்த வழக்கில் தர்க்கத்துக்குரிய விடயமாக விளங்கவில்லை. ஆகவே அந்த விடயம்சம்பந்தமாக உயர்நீதிமன்று ஒரு முடிவை ஏற்படுத்தவில்லை.

''ஆகவே இந்த வழக்கில் ஏற்பட்ட சூழ்நிலை சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரவேண்டியவிடயம் என்ற காரணத்தால் இந்த வழக்கின் பிரதியைச் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கின்றேன். அத்துடன் சிறைச்சாலை அதிகாரி மீண்டும் அறிவித்தல் கொடுக்கப்பட்டால் மட்டும் மன்றில் சமூகமாகஇருக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்'' [மா]

## துப்பாக்கி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கைதுசெய்யப்பட்டனர்.

கொள்ளைக் கோஷ்டியிடம் இருந்து பெறுமதியுள்ள கொள்ளைப் பொருட்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

# றிமாண்ட்

(சாவகச்சேரி)

மீசாலை கொள்ளை வழக்கில் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது அவர்களை றிமாண்டில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி சி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

## மரணஅறிவித்தல்

### கே. அப்பாபிள்ளை

கே. அப்பாபிள்ளை காலமானார். இவர், சௌந்தர்ய நாயகியின் அன்புக்கணவரும் இலங்கை காட்புறுதிக் கூட்டுத்தாபன பேரின்பநாயகி, மோஹனம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வீ.ஏ. திருஞானசுந்தரத்தின் மாமனும் ஆவார். ஈமைக்கிரியைகள், இன்று மாலை செம்மணி மயானத்தில் நடைபெறும். 1049


RADIO OFFICERS — P. M. G. Cert. Apr. 82

மற்றும் வெல்டிங் [Electric & Gas] வயறிங் முதலிய பயிற்சிகள். வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் தொழில்கள் பெற ஏற்றவை. நவீனமுறையில் பொறியியலாளர்களால் நடாத்தப்படும். ஆங்கிலம் இலவசம். இலவசக் கையேட்டிற்கு விண்ணப்பிக்கவும்.

NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

57, 58 பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக காங்கேசன்துறை வீதி 108ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 24-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper, the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.